1983 மார்ச் 7]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனர் வாழ்வு அளிப்பதற்கு அந்த மக்கள் வசிக்கக் கூடிய பகுதிகளில் அவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கச் செய்கின்ற உணர்வோடு அரசினுடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. அது மட்டுமன்றி, கறவை மாடுகள் வழங்குதல் போன்ற பலவற்றையும், ஸ்டோன் கிரஷிங் யூனிட்ஸ் என்று சொல்கின்ற அந்த யூனிட்டுகளையும் அளித்து, அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அரசு அளித்து கொண்டிருக்கிறது. அது குறித்து முழு விவரம் இல்லை என்றாலும் அந்த மக்கள் இருக்கும் பகுதியிலே அவர்களுக்கு நிரந்தரமான வருமானம் கிடைக்கும் வழிவகையை செய்கின்ற திட்டத்தை அரசு வைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்பு தள்ளிவைக்கப் பெற்ற வினா எண். 240-ஐ இப்போது எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஒரு விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பெற்றுள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, அவை முன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இங்கே அறிக்கை வைக்கப்படவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அறிக்கை இல்லாமல் எப்படிக் கேள்விகள் கேட்கமுடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே இந்தக் கேள்வி அமைச்சர் அவர்கள் வராத காரணத்தால் தள்ளிவைக்கப் பட்ட ஒன்றாகும். அன்றைக்கு இந்தச் சபையிலே அந்த அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வைக்கவில்லை என்று சொல்வது தப்பு. ஏற்கெனவே கொடுத்தாகிவிட்டது. அதைப் பார்க்கவில்லை என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அதைத் தேட முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியைத் தள்ளி வைத்துவிட்டு, மீண்டும் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியை மாற்றுவதற்கு ஃப்ளோரின் கன்செண்டை வாங்க வேண்டும். ரூல்படி அவ்வாறு வாங்க வேண்டும். நான் ரூலைப் படிக்கிறேன்.

1983 மார்ச் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் ரூலைப் படிப்பதற்கு முன் நான் சொல்கிறேன். இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலை என்னவென்றால், 240ஆம் எண்ணுள்ள கேள்வி எடுக்கப்பட்டது, இந்தக் கேள்வி முன்னர், அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பட்டது. அன்றைக்கு அந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அன்றைக்கு வைக்கப்பட்டது இன்றைக்கு நினைவு இருக்கும் என்பது முடியாத காரியம். உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்க முடியாதுதான். எனவே அந்த அறிக்கை இல்லாத நிலையில் இதை எடுத்துக் கொண்டால் எப்படி விவாதிக்க முடியும் என்ற பிரச்னையை உறுப்பினர்கள் எழுப்பினார்கள். ஆகவே, இந்தக் கேள்வியைப் பிறகு திரும்ப எடுத்து கொள்ளலாம். அப்படித் தீர்ப்பளிப்பதற்கு எனக்கு உரிமை உண்டு. ஆகவே, இதிலே பிரசினை இல்லை.

சங்கரன்கோவில் நகரில் ஆதிதிராவிடர் மாணவர் மாணவியர்களுக்கான உணவு விடுதிகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 241—திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகரில் ஆதிதிராவிடர் மாணவர், மாணவிகளின் அரசினர் உணவு விடுதிகளுக்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் நகரில் மாணவியர் உணவு விடுதிக்கு 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டிடம் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் இக்கட்டிட வேலையானது தொடங்கப்பட்டு விட்டது என்றும், இன்னும் 6 மாதங்களுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்கள். மேற்படி நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்ட முன்மொழிவுகள் எதுவும் நிலுவையில் இல்லை என்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.